**ஜூன் – 13**

**"நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்."** **- சங் 17 : 15.**

"நமது மேலான எண்ணங்கள் இப்பொழுது சிறகு கொண்டு நேரத்தின் பயனற்ற
கவலைகளிலிருந்து எழுந்து, பிரிக்கும் திரையை விலக்கி,
நித்தியத்தின் மகிமைகளைப் பார்ப்பதாக."

தேவன், கிறிஸ்து கடந்த காலத்தில் வசித்த, இப்பொழுதுள்ள மதிப்புக்குரிய பரிசுத்தவான்கள், ராஜ்ய சுதந்திரம் எதிர்காலத்தில் கிறிஸ்துவோடு கூடி வேலை செய்யும் பாக்கியம், தேவ ஏற்பாட்டின் மகத்துவமும் கடமையும், அடையப்போகும் மகிமை, இப்பொழுதுள்ள ஜீவியத்தின் வேலை முடியும்போது, கிறிஸ்துவோடு நாம் கூட்டிச் சேர்க்கப்படுவதின் பாக்கியம் ஆகிய இவைகளின் பேரிலுள்ள எண்ணங்கள் நம்முடைய மனதை நிரப்பி, நமது இருதயத்தை ஏவுவதாக இந்த சிந்தனைகளோடு, ஜெபத்தின் மூலமாகவும், தேவனுடைய வார்த்தையை தியானிப்பதின் மூலமாகவும், தொழுது கொள்ளவும், துதிக்கவும் நாம் ஒன்று சேர்வதின் மூலமாகவும் கிடைக்கிற கூடுதலான ஆறுதலையும் பாக்கியத்தையும் பெறுவோமாக. **- Z ’95, 251 (R 1884).**

தேவனுடைய சாயல் இங்கே அவருடைய குணம், சுபாவம், ஆட்சி இவைகளைக் குறிக்கிறதாக நாம் அறிகிறோம். நாம் அடைவதற்குரிய இலக்காக இவைகளை அவர் வைத்திருக்கிறார். அவைகளை அடைவதற்கு ஆயத்தமாயிருக்கிற இவ்வாழ்க்கையிலுள்ள மாறுபாடான அனுபவங்கள், இப்பொழுதுள்ள நமது நிலைமையில் இப்போது மனரம்மியத்துடன் இருந்தாலும், அதோடு திருப்தியுள்ளவர்களாய் இருக்கக் கூடாதவர்களாக்குகின்றன. உண்மையுள்ளவர்கள் தாங்கள் வாஞ்சிக்கிறவர்களை அவ்வளவு முற்றிலுமாகப் பெறப் போகிறோம், தங்களுடைய பங்கில் அடையப்போகிற பூரண திருப்தியே எப்பொழுதுமுள்ள அவர்களுடைய பாக்கியமான அனுபவமாக இருக்கும். இந்த எதிர்காலப்பலன் நாம் உண்மையுள்ளவர்களாயிருக்க நம்மை ஏவுகிறது. **-P ’35, 101.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

1யோவா 3:2; சங் 4:6; ஆதி 17:1; லூக் 1:6; 2கொரி 3:18; 5:1-8; யோபு 19:26,27; ஏசா 61:10; மத் 5:8; 1கொரி 13:12; வெளி 22:4; 1கொரி 15:23, 41-48; 1தெச 4:13-17.

**கோபுரவாசிப்பு : Z ’14, 345 (R 5578)**

**வினாக்கள் :** உயிர்தெழுதலின் நம்பிக்கை இந்த வாரத்தில் எனக்கு என்னவாக இருந்தது? அது எவ்வாறு என்னைப் பாதித்தது? அதனுடைய பலன்கள் எவை?